# வல்வெட்டித்துறையில் பட்டம் போட்டியும் கலை கலாசார பண்பாட்டு வளர்ச்சியும்

**பின்னணி:**

வல்வெட்டித்துறை இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாண மாவட்டத்தில் கரையோரமாக பருத்தித்துறை கீரிமலை வீதியில் அமைந்துள்ள ஒரு பட்டினம். இதன் வடக்கு பகுதியும் இந்தியாவின் கோடிக்கரைப் பகுதியும் பாக்கு நீரிணையால் பிரிக்கப்பட்டுள்ளது.

எமது பாரம்பரியத் தொழில் கப்பல் கட்டுவதும் திரை கடல் ஓடித்திரவியம் தேடுவதுமாகும் இலங்கையிலே மிகச்சிறந்த கப்பல் கட்டும் தொழில் வல்வெட்டித்துறையிலேயே அமைந்திருந்தது என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. இங்கு தலைசிறந்த கப்பல் கட்டும் மேஸ்திரிமார் பரம்பரையினர் வாழ்ந்து வந்துள்ளனர்.

1938ம் ஆண்டு வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா சென்றடைந்த பாய்மரக்கப்பலான "அன்னபூரணி அம்மாளை" கட்டியவர்களும் அதை செலுத்திச் சென்றவர்களும் வல்வெட்டித்தறையினரே. இதை எழுதிக் கொண்டிருக்கும் நான் 2013ல் எழுதி வெளியிட்ட "ஆழக்கடல் வென்றவர்கள்" என்ற நூலில் வல்வெட்டித்துறை துறைமுகத்தில் தரித்து நின்று பிறநாட்டு வணிகம் புரிந்த 113 கப்பல்களின் பெயர்கள், முதலாளிமார்களின் பெயர்கள் மற்றும் தண்டயல்மார்களின் (Captains) பெயர்கள் என்பவற்றை குறிப்பிட்டுள்ளேன்.

பாய்மரக்கப்பல்கள் மூலம் வல்வெட்டித்துறை மக்கள் இந்தியாவின் நாகபட்டினம், அதிராம்பட்டினம், காக்கிநாடா, கல்கத்தா, மற்றும் மலேசியா, சிங்கப்பூர், நிக்கோபார், பினாங்கு, சுமாத்திரா, பர்மா போன்ற நாடுகளுக்கு சென்று தம்மால் கட்டப்பட்ட 11000 மூடைகள் வரை கொண்டு செல்லக் கூடிய கப்பல்களில் வணிபத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இப்படிப்பட்ட எமது கடலோடிகள் பருவக்காற்றான வாடைக்காற்றுக் காலத்தில் அதாவது தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்திற்கு முன் வல்வெட்டித்துறைக்கு வந்து ஓய்வெடுப்பர்.

இப்பருவகாலத்திலே இயற்கையாகவே அவர்களிடமிருந்த கப்பல்களுக்கு பாய் கட்டும் நுட்பத்தை பயன்படுத்தியும் வாடைக்காற்றின் சாதக நிலைமையைப் பயன்படுத்தியும் பிள்ளைகளுடன் பொழுதை இனிதே கழிக்க பட்டம் கட்டுவதில் ஆர்வத்தை செலுத்தியதாக ஊகிக்க முடிகிறது.

இக்கலை 17ம், 18ம் நூற்றாண்டுகளிலிருந்தே வந்ததாகவும் அறியக் கிடைக்கின்றது. எந்தக் கலைக்கும் போட்டி என்று ஒன்று இருக்கும். அந்த ரீதியிலே இப்பட்ட ஏற்றும் கலையிலும் போட்டிகள் நிலவியது.

இவை ஒழுங்கமைக்கப்பட்டு நிறுவனரீதியாக இல்லாதிருந்த போது ஊரில் உள்ள குறுச்சிகளுக்கிடையேயும், அவர்கள் நடாத்தும் மெய்வல்லுநர் இல்ல விளையாட்டுப் போட்டிகளிலும் நடைபெற்று வந்தன வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் பாராட்டுக்களும் வழங்கப்பட்டன.

அந்தக் காலத்தில் இப்பட்டங்களை கட்டுவதற்கு இயற்கைப் பொருட்களான பர்மா நாட்டுப் பகுதிகளிலிருந்து கடலில் மிதந்து வரும் மூங்கில், சணல், இழைக்கயிறு (வாலாவுக்கு) பட்டமொட்டும் பேப்பர் (இது கடையில் வாங்கப்படும்) மற்றும் கோதுமை மா கழிப்பசை என்பவற்றை பயன்படுத்தினார்கள்.

ஆரம்ப காலத்தில் ஒரு சிலவகையான பட்டங்களே அறிமுகமாயிருந்தது. அவற்றுள் சிலவருமாறு
வவ்வால் (மூன்று மூலை), கொக்கு, பராந்து, பாராத்தை, கட்டுக்கொடி, மீன், பெட்டிப் பட்டம், காக்கை வவ்வால், நட்சத்திர கொடி, மணிக்கூண்டுக் கொடி, பாம்புப் பட்டம் என்பனவாகும்.

இதில் கொக்கு, பராந்து கட்டுக்கொடி, எனும் சாதாரண பட்டங்கள் காற்றில் பறந்து அங்குமிங்கும் சாடிக் கொண்டிருக்கும்போது அவை விதவிதமான ஒலிகளை எழுப்பு (கூவுவதற்காக) வதற்காக "விண்" என்னும் வில்லுப்போன்ற கருவியை பட்டங்களில் பொருத்தி அதன் ஒலியைக் கேட்டு மகிழ்வர். இரவிலும் இவை வானிலேயே பறக்க விடப்படுவதால் இவற்றை இராக்கொடி என அழைப்பர்.

இவ்விண்ணானது பனைமரத்தின் பச்சை மட்டையிலிருந்து பெற்படும் நாரையும் கண்ணாடியின் உடைந்த துண்டினையும் உள்ளங்காலையும் பயன்படுத்தி தயாரிக்கப்படும் tape recorderல் பாவிக்கும் கசட்டின் நாடா போன்ற கீலம், முருங்கை மரத்திலிருந்து செதுக்கி எடுக்கப்பட்ட "குகை" (துளையிடப்பட்டவை) எனும் இரு சிறிய கட்டைகள். இவை மரத்துண்டையும் நாடாவையும் இரு பக்கமும் பொருத்தி பிடிப்பதற்கு உதவுகின்றன. (இது வில்லுப்பாட்டில் உபயோகப்படுத்தப்படும் மணிகள் கட்டிய வில்லின் அமைப்பை ஒத்தவை)

இவ்வாறு இருந்த பழய பட்டங்கள் நவீன யுகத்தில் பல பரிமாணங்களைப் பெற்று நாம் இன்று அன்றாடம் அனுபவிக்கும் விஞ்ஞானப் பொருட்கள் ரூபத்திலும் 3D எனப்படும் முப்பரிமாண விதிமுறையுடன் கூடியதுமான கலையாக அமைந்துள்ளது.

## வல்வெட்டித்துறையில் பட்டப் போட்டியின் வரலாறு

வல்வை சனசமூக சேவா நிலையம் எனப்படும் ('valvai community centre") அமைப்பே இதனை முதன் முதலில் ஒழுங்குபடுத்தி ஒரு நிகழ்ச்சியாக நடாத்தியது. இதற்குரியதளமாக அமைந்தது வல்வெட்டித்துறை துறைமுகத்துடன் கூடிய பெரிய கடற்கரைப்பகுதியாகும். இது ரேகு (Custom) அமைந்த இடமாக இருந்தமையால் ரேவடி என்றும் பின்னர் திரிபடைந்து தற்சமயம் ரேவடிக்கடற்கரை என அழைக்கப்படுகிறது. (சுங்க இலாகாவிற்கு சொந்தமான இப்பகுதியில் உள்ள (நான்கு (04))பரப்புக் காணிகயை வல்வை நகராட்சி மன்று கையகப்படுத்தும் நடவடிக்கைகள் இக்கட்டுரையை எழுதும் போது இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன)

இது இச்சனசமூக நிலையத்தின் பொன்விழாவை 1993ல் கொண்டாடிய போது ஒருங்கிணைக்கப்பட்டது. இந்நிகழ்வுடன் வல்வையின் கலை கலாசாரத்தை பேணும் வகையில் சயிக்கிள் ஓட்டம், குத்துச்சண்டை, மரதன் ஓட்டம், இசை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம் பெற்றன. (வல்வை சனசமூக சேவா நிலையம் 2018ல் தனது 75வது கொண்டாவுள்ளது)

இந்நிகழ்வு இளைஞர் யுவதிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றதுடன் உற்சாகசத்தையும் ஊட்டியது தொடர்ந்து வருடாந்தம் நடைபெற்று வந்த இந்நிகழ்வானது 1995 ஆண்டிலேயே இறுதியாக அவர்களால் நடாத்தப்பட்டது.

அதன் பின்னர் நிலவிய போர்க்காலச் சூழ் நிலையில் அது கைவிடப்பட்ட போது ரேவடி கடற்கரையை போல அதற்கு மேற்குப்புறமாக அமைந்த “உதய சூரியன் உல்லாசக் கடற்கரை” இவ்விழாவை நடாத்த கை கொடுத்தது.

இவ்விடம் மதவடி என அழைக்கப்படுகிறது. இங்கு “விக்னேஸ்வர சனசமூக நிலையம்” அமைந்துள்ளது. அத்துடன் “உதய சூரியன் விளையாட்டுக் கழகமும்” செயற்பட்டு வருகின்றது. இவ்விரு அமைப்புக்களும் இணைந்து “பட்டம் ஏற்றும் போட்டியை 2011ம் ஆண்டிலிருந்து வெகு சிறப்பாக நடாத்திவருகின்றன. ஆரம்பகாலப் போட்டிகளில் வல்வை தீருவில் விளையாட்டுக் கழகத்தினரின் ஓர் அமைப்பான “குழவிகள் கலாமன்றம்” பறக்கவிட்ட 2 தலை ரட்கன், லான்மாஸ்ரர், பறக்கும் நட்சத்திரம், சனிக்கிரகம், ஆகாயவிமானம், ரோபோ போன்றவை உள்ளங் கவர்பவையாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் 14.01.2017 தைப்பொங்கல் தினத்தன்று நடாத்தப்பட்டது 7வது போட்டியாகும்.

இப்பட்டமேற்றும் துறைவில் ஒரு பரிணாம வளர்ச்சியாக “லைற்பட்டம்” என்பது அறிமுகமானதுடன் மிகப்பெரிய பட்டங்களை அமைக்கும் கலையும் அறிமுகமானது. இவை 30' - 40' அடிகள் வரை உயரமானவையாக இருந்தன. இக்குறித்த இராட்சத பட்டத்தை ஏற்றுமுன் சிறியதிலிருந்து பெரியது வரையான பல பட்டங்களை முன்னரே ஏற்றி அவற்றை இக்குறித்த பட்டத்தின் பின் புறத்தில் இணைத்து இராட்சதபட்டமேற்றுவதற்கு பின்பக்கமான இழுவைச் சந்தியையும் ஏற்டுத்துவர்.

இப்பட்டங்களின் வரலாற்றில் வல்வெட்டித்துறை நெடியகாட்டுப் பகுதி இளைஞர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்கள் புகைக்குண்டுகளை தயாரிப்பதிலும் மின் அலங்காரங்களையும், பெரிய கட்டவுட்டுக்களை செய்வதிலும் வல்லவர்கள். இவற்றில் இவர்களுக்கு இணையானவர்கள் இக்குடாநாட்டிலோ அன்றி இலங்கையிலும் இல்லை எனக் கூறலாம்.

இக்குறிச்சியைச் சேர்ந்த இளைஞர்கள் லைற் பட்டம் விடுவதில் சிறந்து விளங்கினர்.

“லைட் பட்டம்” என்பது மேற்குறித்த பட்டங்களுக்கு நிலத்திலிருந்து வயர் மூலம் பட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள வண்ண வண்ண மின்குமிழ்களுக்கு (Bulbs) தொடர்பை கொடுத்து அவற்றின் மூலம் பலவிதமான தோற்றங்களை ஆகாயத்தில் ஏற்படுத்தி ரசிகர்களை மகிழ்விப்பதாகும்.

பகலில் பறக்கவிடப்படும் பட்டத்திற்கும் நிலத்திற்குமிடையேயான பெரிய கயிறுகளில் சிறிய சிறிய ஏணைகள்/ தொட்டில்களை உருவாக்கி அதில் சிறார்களை ஏற்றி அமர வைத்து பனையளவு தூரத்திற்கு செல்லலீட்டு மீண்டும் இறக்கி மகிழ வைப்பர்.

இவ்விடயத்தில் எனக்கு ஒரு செய்தி ஞாபகத்திற்கு வருகின்றது. அதாவது நெடிய காட்டுப்பகுதியிலே இப்படியான இராட்சதபட்டம் ஒன்று 1963ல் ஏற்றப்பட்ட போது அதுவும் லைற்றுக்கள் (Bulbs) பூட்டிய பட்டம் மேலே ஏறிநின்ற போது அன்றைய மாலைப் பொழுதில் அங்கு வந்த "சிதம்பரப்பிள்ளை நடராசா" (நடைக்குட்டி மேசன்) என்பவர் தான், தனியே அப்பட்டத்தை பிடிப்பதாகக் கூறி அதைப்பிடித்த மறுகணமே அது அவரை ஒரு பனை அளவு உயர்திற்கு கொண்டு சென்று விட்டதாம். தெய்வாதீனமாக அங்கு நின்ற இளைஞர்கள் கயிற்றினை அவர் நிலத்திற்கு வரும் வரை இழுத்து உயிர் காப்பாற்றியுள்ளனர்.

வல்வெட்டித்துறையில் நடைபெறும் இந்திரா விழா வல்லை மக்களின் கலைப் பண்பாட்டையும் பரிணமிப்பது போல இப்போட்டியையும் வல்வெட்டித்துறையின் கலை பண்பாடுகளின் வளர்ச்சியின் ஒரு அம்சமாக கூறி பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

இவ்விழாவில் பல இடங்களிலிருந்தும் மக்கள் போட்டியில் பங்கு பற்றுகின்றனர். உரிய முறைப்படி ஒழுங்கமைக்கப்பட்டு நடுவர்களின் தீர்ப்பின் படி தெரிவுகள் நடைபெற்று பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

2011ல் இப்போட்டி இவ்வளவு பிரபல்யம் இல்லாதிருந்த போதும் வருடா வருடம் இதைக் கண்டு கழிப்பவர்களினது தொகை அதிகரித்து கடந்த வருடக்கணக்கின் படி 30000 தொடக்கம் 40000 மக்கள் வரை பார்வையிட்டு மகிழ்ந்துள்ளனர் என அறியக் கிடைக்கின்றது. இம்முறை இத்தொகை அண்ணளவாக 50000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் கழகத்தினரே சனநெரிசலை கட்டுப்படுத்தியபோதும் சமீபகாலங்களில் இக்கடற்கலையை வந்தடையும் கடற்பகுதியை தவிர்ந்த ஏனைய 03 பாதைகளும் தடைசெய்யப்பட்டு தெற்கே தீருவில் மைதானம் மற்றும் தூபியடி போன்றனவும் மேற்கே சிதம்பரக்கல்லூரி மைதானமும் வாகன தரிப்பிடங்களாக செயற்பட இலங்கை காவல் துறையினர் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தி விழா சிறப்புற நடைபெற உதவி வருகின்றனர்.

இந்த ஆண்டும் (2017 பட்டப்போட்டி நிறைவடைந்ததும் வழமைபோல அக்கடற்கரையில் மேடை அமைத்து இந்நிசை நிகழ்ச்சிகளை நடாத்தி பார்வையாளர்களை பரவசப்படுத்தினார்கள். ஆனால் இம்முறை விசேடமாக இந்தியாவிருந்து வரவழைக்கப்பட்ட கலைஞர்களால் இசை அரங்கு அலங்கரிக்கப்பட்டது.

சமீப கால வருடாந்த நிகழ்வுகளில் பின்வரும் உருவங்களை பிரதிபலிக்கும் பட்டங்கள் பறக்கவிடப்பட்டுள்ளன.

இவை பின்வருவனவற்றின் உருவங்களை பிரதிபலிப்பனவாக இருந்தன.

1. கப்பல்
2. மீன்பிடிவள்ளமும் என்ஜினும் (இணைந்த இயந்திரம்)
3. மாட்டுவண்டில்
4. (அரச) குதிரைவண்டில்
5. சுழலும் பெட்டிக் கொடி
6. றேலர் (ஆழ்கடல் மீன்பிடிக்க)
7. கரம் சுண்டல் வண்டில்
8. கோவலவன் (நட்சத்திரமீன்)
9. இறால்
10. தும்பி
11. இரண்டு தலை ட்ரகன்
12. ஆகாய விமானம்
13. றொக்கட்
14. றோபோ

இவற்றில் அநேகமானவை (3D) முப்பரிமாண முறையில் செயற்படுகின்றன.

**இம்முறை இராட்சத ஓணான் போட்டியில் முதலாமிடத்தை தக்கவைத்துக் கொண்டது.**

**வல்வை பட்டப் போட்டி 2017 இல் பரிசு பெற்ற 30 பட்டங்கள் (பெயர் விபரங்கள்)**

| **போட்டியாளர்** | **பட்டத்தின் பெயர்** |
|---|---|
| 1. மகேந்திரன் பிரசாந்த் | இரதட்சத ஓணான் |
| 2. மகேந்திரன் ஹாசன் | அகதிகள் வண்டி |
| 3. சி. ஸ்ரீராஜ் | பனிச் சறுக்கி வண்டி |
| 4. மகேந்திரன் லக்ஸ்மன் | கிடங்கு தோண்டும் இயந்திரம் |
| 5. ஸ்ரீ தேசாஜி நிதர்சன் | போர்ப் படகு |
| 6. ப. மதியழகன் | உழவு இயந்திரம் |
| 7. ஸ்ரீ. செந்தூரன் | நாகத்தலை |
| 8. சி. ராஜ்குமார் | சுழல் பெட்டிப் பட்டம் |
| 9. சி. சதாரூபன் | பறக்கும் ஒளிப்படக் கருவி |
| 10. ஆர். தீபன்ராஜ் | சீப்பிளேன் |
| 11. முரளி பரிதியன் | இராட்சத ரோபோ |
| 12. தங்கவேல் ஜெயகாந்த் | பீரங்கி வண்டி |
| 13. பா. நந்தரூபன் | இராணுவ விமானம் |
| 14. ஆர். திவ்வியா | சுழல் பட்டம் |
| 15. S. சாந்தகுமார் | செய்மதி |
| 16. ச.மகேஸ்வரன் | பெட்டி |
| 17. முரளி பரிதியன் | 7 பொட்டிகள் |
| 18. சிவலிங்கம் | கணவாய் |
| 19. சி. டனுஷன் | பாய்க்கப்பல் |
| 20. இரா. கிருசாந்த் | எலும்புக்கூடு |
| 21. ஸ்ரீ. சுஜீவன் | வேவு விமானம் |
| 22. ர. திருக்குமரன் | வள்ளம் |
| 23. முரளி பரிதியன் | எலும்புக்கூடு |
| 24. வாசவி ஆதவன் | 3 ஸ்டார் |
| 25. அதிரூபசிங்கம் ஆதவன் | ஐங்கோளக் கூம்பு |
| 26. அற்புத ஆசுகன் | அம்புக்குறி |
| 27. அமிழ்தினி ஆதவன் | அக்டோபஸ் |
| 28. வாசவி ஆதவன் | முக்கோணக்கூம்பு |
| 29. ஜெயச்சந்திரன் பாலேந்திரன் | சோர்ட்ஸ் |
| 30. பு. விதுசன் | வீடு |



இராட்சத ஓணானை உருவாக்கிய கலைஞர் வல்வெட்டித்துறை - வைத்திலிங்கம் மகேந்திரன் (கண்ணன்)

2017ல் ஏறமறுத்த பட்டங்கள்

1.இராட்சதக் குழவி
2. தேன்குடிக்கும் வண்ணத்துப்பூச்சி
3. பல்லி
4. செருப்பு
5. வாள் ஏந்திய வீரன்
6. புகை வண்டி

இத்துடன் 2017 போட்டியில் பங்கு கொண்ட சில பட்டங்களின் படங்கள் இணைக்கப்படுகின்றன.
இப்போட்டிகளை கருப்பொருளாகக் கொண்டு ஒரு இசைத்தட்டும் வெளியிடப்பட்டுள்ளது.

கட்டுரையாளர் - **வல்வை ஜெயம்**
(வல்வெட்டித்துறை)

N.Sivaratnam
B.A (S.L), A.I.B, FIB(S.L), P.G.Dip-in Pub.Admin
Rtd. Asst. General Manager,
Bank of Ceylon




நிலத்தில் பாரிய துளையிடும் இயந்திரம் (Driller) வடிவமைப்பாளர் - மகேந்திரன் லஷ்மன் (வல்வெட்டித்துறை)





பட்டப்போட்டியை பார்வையிடும் மக்கள் கூட்டம்




அகதிகள் வண்டி :- போர்க்காலத்தில் மாடுகளும் தொலைந்த நிலையில் மூட்டை முடிச்சு மற்றும் கைக்குழந்தையுடனான தாயுடன் (உருவ அமைப்பு வல்வெட்டித்துறை மகேந்திரன் ஹாசன்)




உழவு இயந்திரம் :- வடிவமைப்பு வல்வை ப.மதியழகன்


சுழல் பெட்டிப் பட்டம் :- ஆக்கியோன் வல்வெட்டித்துறை சி.ராஜ்குமார்


பாய்க்கப்பல் : சி.தனுஷன்



இராட்சத ரோபா :- வடிவமைப்பு - முரளி பரிதியன்



எலும்புக்கூடு  - வல்வை இரா கிருஷாந்த்




நாகத்தலை - ஸ்ரீசெந்தூரன்






தங்கவேல் ஜெயகாந் -
இராணுவ பீரங்கி வண்டி



மீன் - பு.விதுஷன்



வண்டு - அமிழ்தினி ஆதவன்



இராட்சத பல்லி
ரு.கிஷோர்



அலங்கார ஓணானும் மனிதனும்
மகேந்திரன் பிரசாத்



***R.***தீபன்ராஜ் - சீபிளேன்*(Seaplane)*




செய்மதி
சாந்தகுமார்